www.agaram.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 08 |

ஆண்டிறுதிப் பரீட்சை - 2018

பாடசாலையின் பெயர் : ..............................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : .......................................................................
...................................................................................................... நேரம் : 02 மணித்தியாலம்

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## தமிழ் மொழியும் இலக்கியமும்
### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. "உயிர்களை ஓம்புதல் மனித நேயமிக்க செயலாகும்" இங்கு ஓம்புதல் என்பதன் ஒத்த கருத்து
   1. அன்பு காட்டுதல் 2. பாதுகாத்தல் 3. உணவளித்தல் 4. சுதந்திரமளித்தல்

02. "புரவலன் புலவர்களின் வறுமையை நீக்கினான்" இங்கு புரவலன் என்பது
   1. அரசன் 2. வீரன் 3. ஆண்டி 4. மறவன்

03. "தெனாலிராமன் களங்கமான உள்ளத்துடன் அரண்மனையினுள் நுழைந்தான்" இதில் களங்கம் என்பதன் எதிர்ச் சொல்
   1. மாசு 2. அச்சம் 3. ஐயம் 4. நிஷ்களங்கம்

04. "நீல கண்டன் ஆலம் உண்டு தேவர்களைக் காப்பாற்றினார்." ஆலம் என்பதன் எதிர்ப் பொருள்
   1. வேலம் 2. விடம் 3. அமிர்தம் 4. அவிசு

05. "அவன் துடிப்புள்ள இளைஞனாக வலம் வந்தான்." இங்கு இளைஞன் என்பதன் எதிர்ப்பால்
   1. யுவதி 2. இளைஞி 3. இளையவள் 4. இளமையானவள்

06. ஆடு குட்டி என்பது போல ஆமையின் இளமைப் பெயர்
   1. குட்டி 2. குஞ்சு 3. பறள் 4. பார்ப்பு

07. நரி ஊளையிடும் என்பது போல பன்றி
   1. கத்தும் 2. கதறும் 3. உறுமும் 4. பிளிறும்

08. "ஐயம் தீர்க்க அல்லும் பகலும் ஆராய்ந்தான்." இதில் அல்லும் பகலும் என்பது
   1. இணைமொழி 2. இரட்டைக்கிளவி
   3. அடுக்குத் தொடர் 4. அடுக்கிடுக்குத் தொடர்

09. Telescope (டெலஸ்கோப்) என்பதன் தமிழ் வடிவம்
   1. இதய துடிப்பு மானி 2. தொலைநோக்கி 3. நிறமாலை 4. ஒலிவாங்கி

10. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்ற உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
   1. ஏமாற்றம் 2. பொறுமை 3. நிராசை 4. கபடம்

11. "உலாந்தா" என்பது எம் மொழிச் சொல்
   1. போர்த்துக்கேயம் 2. மராட்டி 3. பிரெஞ்சு 4. ஒல்லாந்து



agaram.lk

12. அப்படியா! புலவர் பெருமானே, இவ் வாக்கியத்தில் இடம் பெறும் நிறுத்தற் குறியீடு
    1. மெய்ப்பாட்டுக் குறி, காற்புள்ளி  2. முற்காற்புள்ளி , முற்றுப்புள்ளி
    3. அனுவாதக்குறி , விட்டிசைக்குறி  4. மேற்கோள் குறி, காற்புள்ளி

13. மலை, பாம்பு, யானை, வான் ஆகிய சொற்களைக் குறிக்கும் ஒரு பொருட் சொல்
    1. சிங்கம்  2. நாகம்  3. அளி  4. பருவதம்

14. “வெள்ளை முயல் புல்லை மெல்ல உண்டது” இதில் எழுவாய் அடைமொழி
    1. முயல்  2. மெல்ல  3. புல்  4. வெள்ளை

15. அண்ணனது வீடு என்பதில் உணர்த்தப்படும் வேற்றுமைப் பொருள்
    1. உடைமை  2. இடம்  3. ஆக்கல்  4. ஏது

16. கிரந்த எழுத்துக்களின் எண்ணிக்கை
    1. ஐந்து  2. எட்டு  3. ஆறு  4. மூன்று

17. மரம், மலை, நிலம் என்பன
    1. காரணப் பெயர்  2. இடுகுறிப் பெயர்  3. காரண இடுகுறிப் பெயர்  4. சினைப் பெயர்

18. நாடகம் என்பதனைப் பிரித்தெழுதினால்
    1. நாடு + அகம்  2. நாட + கம்  3. நாடு + கம்  4. நாட்டு + அகம்

19. “அவனது அறிவு கல்விக் கடலாகக் காணப்பட்டது.” இதில் இடம் பெற்றுள்ள அணி
    1. சிலேடை  2. உருவகம்  3. உவமை  4. உயர்வுநவிற்சி

20. இறந்த கால இடைநிலை அல்லாதது
    1. ப்  2. த்  3. ற்  4. ட்

($20 \times 2 = 40$ புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.

(1) வாசிப்பின் முக்கியத்துவம்

(2) மாலைநேர கடற்கரைக் காட்சி

(3) கிழிந்த புத்தகத்தின் சுயசரிதை

(4) நான் நாட்டின் தலைவரானால்.............

(20 புள்ளிகள்)

02) போதைப் பொருள் பாவனையை ஒழிப்போம் என்ற தலைப்பில் 50 சொற்களில் அமையுமாறு துண்டுப் பிரசுரம் ஒன்றைத தயாரியுங்கள்.

(10 புள்ளிகள்)

03) பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(1) கான் ஆள நிலமகளைக் கைவிட்டுச் சென்றவனையும் அவனது பாதுகாப்பிற்காகச் சென்றவனையும் குறிப்பிடுக.

(2) “இந்த நாடகசாலையே உலகம்” இக் கூற்று யாருடையது?

(3) திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்களுள் இரண்டினைத் தருக.

(4) “தம்பி மிக அவசரப்பட்டு ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டாய்” இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

(5) “ஏழைகளின் கிச்சிலி” என்று அழைக்கப்படும் பழம் எது?

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

04) பின்வரும் பாடலை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சுற்றுச் சூழல் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழிவகுப்போம்
வெற்று வார்த்தை இதுவல்ல
விளையும் நன்மையோ பலபல

கண்ட பொருளை எரிப்பதனால்
காற்று மாசு அடைகின்றது.
அண்ட வெளியில் ஓசோனும்
அதிகம் பாதிப்படைகிறது

கொதிக்க வைத்த பிறகேதான்
குடிநீர் குடிப்பது நலமாகும்
எதற்கும் விழிப்பாய் இருந்தாலே
எல்லா நன்மையும் கிடைத்திடுமே



agaram.lk

1. இப் பாடல் வலியுறுத்தும் கருத்து யாது?
2. காற்று எவ்வாறு மாசடைகிறது?
3. குடிநீரை எவ்வாறு பருக வேண்டும்?
4. இதில் இடம் பெறும் அடுக்குத் தொடரினைத் தருக.
5. கீழ்வரும் சொற்களுக்கு சமபதம் தருக

   (அ) மாசு -　　　　(ஆ) நன்மை -

(10 புள்ளிகள்)

05) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

01) முரசு + ஒலி

02) பால் + கடல்

03) தெய்வம் + வழிபாடு

04) பொன் + குடம்

05) தவம் + சாலை

06) மரம் + வேர்

07) கலை + விழா

08) குடி + அகழ்வு

09) மண் + பாண்டம்

10) முள் + செடி

(10புள்ளிகள்)

06) கீழ்வரும் மரபுத் தொடர்களைப் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

01) குதிரைக்கொம்பு -

02) அக்கரைப் பச்சை-

03) கைகலத்தல் -

04) பகற்கனவு -

05) ஆறப்போடுதல் -

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

07) பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை , செயப்படுபொருள் ஆகியவற்றைத் தரப்பட்டுள்ள அட்டவணையில் எழுதுக.

(1) நேற்றுக் காலை மழை பெய்தது.
(2) தமயந்தி அழகிய பூஞ்சோலையை அடைந்தாள்
(3) விமலன் பாடப் புத்தகத்தை வாசித்தான்.
(4) இராமன் வீதியில் சென்றான்.

| தொ இல | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk